Australian Government
Department of Home Affairs

TIS TRANSLATING AND INTERPRETING SERVICE

# அடிக்கடிக் கேட்கப்படும் கேள்விகள்

## தமிழ்

மொழிபெயர்ப்பு மற்றும் உரைபெயர்ப்புச் சேவை (TIS நேஷனல்), ஆங்கில மொழி பேசாதவர்களின் சில பொதுவான கேள்விகளுக்கு அவர்களின் சொந்த மொழியில் விடையளிக்க வடிவமைக்கப்பட்ட, அடிக்கடி கேட்கப்படும் கேள்விகளின் தொகுப்பை உருவாக்கியுள்ளது.

### TIS **நேஷனல் வழங்கும் சேவைகள் என்னென்ன**?

TIS நேஷனல், ஆங்கிலம் பேசாதவர்களுக்காகவும், ஆங்கிலம் மொழி பேசாத தங்கள் வாடிக்கையாளர்களுடன் தொடர்புகொள்ள விரும்பும் முகவர்கள் மற்றும் வணிகங்களுக்காகவும் உரைபெயர்ப்பு சேவைகளை அளிக்கிறது. இந்தச் சேவைகளானது ஆங்கிலம் பேசாதவர்கள் ஆஸ்திரேலியாவில் உள்ள சேவைகள் மற்றும் தகவலை சுதந்திரமாக அணுக உதவுகிறது.

TIS நேஷனல் ஆஸ்திரேலியா முழுவதிலும் 150க்கும் மேற்பட்ட மொழிகளில் 2500க்கும் மேற்பட்ட உரைபெயர்ப்பாளர்களுடன் ஒப்பந்தம் செய்துள்ளது.

ஆங்கிலம் பேசாதவர்கள் 131 450 என்ற எண்ணில் அழைப்பதன் மூலம் TIS நேஷனல் மூலமாக ஃபோன் வழி உரைபெயர்ப்பாளர்களை உடனடியாக அணுகலாம்.

மாற்றாக, நீங்கள் நேரடியாக ஒரு அமைப்பைத் தொடர்புகொண்டால், அவர்கள் உங்கள் சார்பாக ஒரு மொழிபெயர்ப்பாளரை ஏற்பாடு செய்யலாம்.

### TIS **நேஷனல் மூலமாக நான் யாரை தொடர்புகொள்ள முடியும்**?

உள்துறை அமைச்சகம் உட்பட 60,000க்கும் அதிகமான நிறுவனங்கள் TIS நேஷனலுடன் பதிவு செய்யப்பட்டுள்ளன. நேஷனலின் பிற வாடிக்கையாளர்களில் சில:

- மாநில மற்றும் மத்திய அரசு துறைகள்
- உள்ளூர் கவுன்சில்கள்
- மருத்துவம் மற்றும் சுகாதாரப் பயிற்சியாளர்கள்
- மருந்தாளுனர்
- பயன்பாட்டு நிறுவனங்கள்
- தொலைத்தொடர்பு நிறுவனங்கள்
- அவசரச் சேவைகள்
- சட்டச் சேவைகள்
- தீர்வு மற்றும் சமூக சேவை வழங்குநர்கள்.

நீங்கள் தொடர்பு கொள்ள வேண்டிய அமைப்பு TIS நேஷனிலிருந்து மொழிபெயர்ப்பாளர் உதவியுடன் கூடிய அழைப்புகளை ஏற்றுக்கொள்வதை TIS நேஷனல் உத்தரவாதம் அளிக்க முடியாது.

## நான் எப்போது TIS நேஷனலை அழைக்கலாம்?

TIS நேஷனல் உரைபெயர்ப்புச் சேவையை 24 மணி நேரமும், ஆண்டுதோறும் ஒவ்வொரு நாளும் பெறலாம்.

நீங்கள் தொடர்புகொள்ளும் அமைப்பை அவர்களின் வழக்கமான வணிக நேரங்களில் மட்டுமே தொடர்புகொள்ள முடிவதாக இருக்கலாம். மேலும் வணிக நேரங்கள் அமைப்புகளுக்கு இடையே மாறுபடலாம். ஆஸ்திரேலியாவில் உள்ள பெரும்பாலான அமைப்புகள் 9 am–5 pm, திங்கள் – வெள்ளி என்ற நிலையான வணிக நேரங்களில் செயல்படுகின்றன. பல நிறுவனங்கள் பொது விடுமுறை நாட்களில் செயல்படுவதில்லை.

## 131 450 என்ற எண்ணை அழைத்தால் என்ன நடக்கும்?

1. TIS நேஷனலை 131 450 என்ற எண்ணில் அழைக்கவும். TIS நேஷனல் தனியுரிமை அறிக்கையை கேட்பீர்கள்.
2. ‘உரைபெயர்ப்பாளர் எந்த மொழியில் பேச வேண்டும்’ எனக் கேட்கப்படுவீர்கள்? உங்கள் மொழியைச் சொல்லவும்.
3. ‘நீங்கள் TIS நேஷனலின் வர்த்தக வாடிக்கையாளரா?’ எனக் கேட்கப்படுவீர்கள். ‘இல்லை’ எனப் பதிலளிக்கவும்.
4. நீங்கள் ஆங்கிலம் பேசும் TIS நேஷனல் தொலைபேசி ஆபரேட்டருக்கு மாற்றப்படுவீர்கள். காத்திருக்கும் போது ‘தொலைபேசி ஆபரேட்டரை நாங்கள் தொடர்பு கொள்ளும்வரை காத்திருக்கவும்’ என உங்கள் மொழியில் சொல்லக் கேட்பீர்கள்.
5. TIS நேஷனல் தொலைபேசி ஆபரேட்டர் உங்கள் மொழியை மீண்டும் ஒருமுறை உறுதிப்படுத்துவார்.
6. தொலைபேசி ஆபரேட்டர் உங்களைக் காத்திருப்பில் வைத்துவிட்டு, உரைபெயர்ப்பாளரைத் தொடர்புகொள்வார். நீங்கள் பின்வரும் செய்தியை உங்கள் மொழியில் கேட்பீர்கள், ‘உரைபெயர்ப்பாளரை நாங்கள் தொடர்புகொள்ளும் வரை காத்திருக்கவும்’.
    - உங்கள் மொழிக்கு உரைபெயர்ப்பாளர் இருந்தால், TIS நேஷனல் தொலைபேசி ஆபரேட்டர் உங்களை உரைபெயர்ப்பாளருடன் இணைப்பார் பிறகு நீங்கள் எந்த அமைப்புடன் தொடர்புகொள்ள விரும்புகிறீர்கள் என்று கேட்பார்.
        - TIS நேஷனலை அழைக்கும் போது, அமைப்பின் பெயர், அதனை தொடர்பு எண் மற்றும் அமைப்புடனான உங்கள் வாடிக்கையாளர் அல்லது கணக்கு எண் (இருந்தால்) அவற்றைத் தயாராக வைத்திருக்கவும்.
        - நீங்கள் யாரைத் தொடர்புகொள்ள விரும்புகிறீர்கள் என்பதை உரைபெயர்ப்பாளர் TIS நேஷனல் தொலைபேசி ஆபரேட்டருக்குத் தெரிவிப்பார். பின்னர், ஆபரேட்டர் கேட்டுக்கொண்ட அமைப்பை அழைத்து உங்களையும் உரைபெயர்ப்பாளரையும் அதனுடன் இணைக்க முயற்சிப்பார்.
    - உங்கள் மொழிக்கு உரைபெயர்ப்பாளர் இல்லையெனில், ஆபரேட்டர் உங்களை விரைவில் மீண்டும் அழைக்கும்படி கேட்பார். நீங்கள் ஒன்றுக்கும் மேற்பட்ட மொழியைப் பேசுபவராக இருந்தால், வேறொரு மொழியில் உரைபெயர்ப்பாளரை நீங்கள் கேட்கலாம்.

## TIS நேஷனல் தொலைபேசி ஆபரேட்டர் அல்லது உரைபெயர்ப்பாளர், நான் எந்த அமைப்புடன் பேச வேண்டும் எனப் பரிந்துரைப்பார்களா?

இல்லை. TIS நேஷனல் தொலைபேசி ஆபரேட்டர், பாகுபாடு இல்லாமல் செயல்பட வேண்டும் மேலும் நீங்கள் எந்த அமைப்பைத் தொடர்புகொள்ளலாம் என்பதைப் பரிந்துரைக்க மாட்டார். நீங்கள் உரைபெயர்ப்பாளருடன் இணைக்கப்பட்ட பிறகு, உரைபெயர்ப்பாளர் உங்களுடன்

முறைசாரா வழிகளில் உரையாடலை மேற்கொள்ள மாட்டார். மேலும் எல்லா உரைபெயர்ப்பு சேவைகளின் போதும் பாகுபாடு இல்லாமல் செயல்படுவார்.

TIS நேஷனலை அழைக்கும் போது, அமைப்பின் பெயர், அதனை தொடர்பு எண் மற்றும் அமைப்புடனான உங்கள் வாடிக்கையாளர் அல்லது கணக்கு எண் (இருந்தால்) அவற்றைத் தயாராக வைத்திருக்கவும்.

## நான் இணைக்கப்பட்ட உரைபெயர்ப்பாளர் எனக்குத் தெரிந்தவராக இருந்தால் நான் என்ன செய்ய வேண்டும்?

உங்களுக்கு உரைபெயர்ப்பாளர் ஏற்கனவே அறிமுகமானவர் என்பதை நீங்கள் அறிந்தால், உரைபெயர்ப்பு அமர்வைத் தொடர வேண்டுமா என்பதை நீங்களே தீர்மானித்துக்கொள்ளலாம். அதே உரைபெயர்ப்பாளருடன் தொடர விரும்பவில்லை எனில், TIS நேஷனல் தொலைபேசி ஆபரேட்டரிடம் அல்லது அமைப்பிடம் தெரிவித்துவிட்டு அழைப்பைத் துண்டிக்கலாம்.

## நான் ஆண் அல்லது பெண் உரைபெயர்ப்பாளரைக் கேட்கலாமா?

கேட்கலாம். குறிப்பிட்ட பாலினத்தில் உரைபெயர்ப்பாளர் வேண்டும் என விரும்பினால், முடிந்தவரை கூடிய விரைவில் TIS நேஷனல் தொலைபேசி ஆபரேட்டரிடம் அல்லது அமைப்பிடம் தெரிவிக்கவும். நீங்கள் கேட்டுக்கொண்ட பாலினத்தில் உரைபெயர்ப்பாளரை அளிக்க TIS நேஷனல் முயற்சிக்கும்.

## குறிப்பிட்ட மதம் அல்லது கலாச்சாரப் பின்னணி கொண்ட ஒரு உரைபெயர்ப்பாளரை நான் கேட்கலாமா?

இல்லை. உரைபெயர்ப்பாளரின் மொழிபெயர்ப்பாளர்கள் மற்றும் உரைபெயர்ப்பாளர்களுக்கான தேசிய அங்கீகாரம் ஆணையம் (NAATI) (https://www.naati.com.au/) தகுதி (கல்வி) நிலை மற்றும் நீங்கள் மிகவும் தகுதிவாய்ந்த உரைபெயர்ப்பாளரைப் பெறுவதை உறுதி செய்வதற்கான வாய்ப்பின் அடிப்படையில் உரைபெயர்ப்பாளர்களுக்கு TIS நேஷனல் தொலைபேசி ஆபரேட்டர்கள் பணிகளை ஒதுக்குவார்கள். கலாச்சாரப் பின்னணி அல்லது மத அடிப்படையில் TIS நேஷனல் உரைபெயர்ப்பாளரை நியமிக்காது.

## உரைபெயர்ப்பாளரை நேரடியாகப் பயன்படுத்த விரும்புகிறேன். அப்படி செய்யலாமா?

செய்யலாம். நேஷனல் ஆன்-சைட் உரைபெயர்ப்புச் சேவைகளை வழங்குகிறது. ஆன்-சைட் உரைபெயர்ப்பாளர் தேவைஎனில், தொலைபேசி மூலம் TIS நேஷனல் வழியாக நீங்கள் உரையாட விரும்பும் அமைப்புடன் தொடர்புகொண்டு, அவர்களிடம் ஆன்-சைட் உரைபெயர்ப்பாளரை ஏற்பாடு செய்யுமாறு கேட்க வேண்டும்.

## நான் அவசர சேவைகளைத் தொடர்புகொள்ள விரும்புகிறேன். என்ன செய்ய வேண்டும்?

அவசரகால ஆம்புலன்ஸ், காவல் நிலையம் அல்லது தீ அணைப்புச் சேவைகளுக்கு எப்போதும் நேரடியாக 000 என்ற எண்ணுக்கு அழைக்கவும். 000 அவசரகால சேவைகள் லைன் ஆனது முன்னுரிமை லைன் மூலம் TIS நேஷனலைத் தொடர்புகொண்டு உங்களை உரைபெயர்ப்பாளருடன் இணைக்கும். இந்தச் சேவை, நாளுக்கு 24 மணி நேரமும், ஆண்டின் ஒவ்வொரு நாளும் கிடைக்கும்.

## ஆங்கிலம் அல்லாத மொழி பேசுபவர்களுக்கு TIS நேஷனல் சேவைகள் இலவசமாகக் கிடைக்குமா?

கிடைக்கும். பெரும்பாலான TIS நேஷனல் உரைபெயர்ப்புச் சேவைகள் ஆங்கிலம் அல்லாத மொழி பேசுபவர்களுக்கு இலவசமாகும். பொதுவாக, நீங்கள் தொடர்புகொள்ளும் அமைப்புகள்

சேவைக்கான கட்டணத்தை ஏற்கும். சில அமைப்புகள் மற்றும் மருத்துவ பயிற்சியாளர்களுக்கு TIS நேஷனல் வழியாக இலவச உரைபெயர்ப்பைப் பெறும் தகுதியுள்ளது.

சில அமைப்புகள் TIS நேஷனல் இடமிருந்து அழைப்புகளை ஏற்பதில்லை, இருப்பினும் நீங்கள் அந்த அமைப்புகளை நேரடியாகத் தொடர்புகொண்டால், அவர்கள் தொலைபேசி உரைபெயர்ப்பாளருடன் உங்களை மீண்டும் அழைக்கலாம்.

TIS நேஷனலின் வாடிக்கையாளர் அல்லாத ஒரு அமைப்புடன் நீங்கள் தொடர்புகொள்ள விரும்பினால் மேலும் அந்த அமைப்பு சேவைக்கான கட்டணத்தை ஏற்க மறுத்தால், நீங்கள் தனிப்பட்ட கணக்கை உருவாக்கி நீங்களாகவே சேவைக்கு பணம் செலுத்துவதற்குத் தேர்வுசெய்யலாம். இதைச் செய்ய, உரைபெயர்ப்பாளரிடம் தெரிவிக்கவும், TIS நேஷனல் தொலைபேசி ஆபரேட்டர் நீங்கள் கணக்கை உருவாக்க உதவி செய்வார். தனிப்பட்ட கணக்கை உருவாக்க, உங்களிடம் கிரெடிட் கார்டு இருக்க வேண்டும்.

## TIS **நேஷனல் மூலமாக ஆவணங்களை மொழிபெயர்க்கலாமா**?

இல்லை. TIS நேஷனல் வணிக ரீதியான ஆவண மொழிபெயர்ப்புச் சேவையை வழங்குவதில்லை.

ஆஸ்திரேலியாவில் நிரந்தரமாக குடியேறியவர்களுக்காக, உள்துறை அமைச்சக ஆவண மொழிபெயர்ப்புச் சேவையை இலவசமாக வழங்குகிறது. நிரந்தர குடிமக்கள் மற்றும் குறிப்பிட்ட தற்காலிக அல்லது இடைக்கால VISA வைத்திருப்பவர்கள், VISA அனுமதிக்கப்பட்ட தேதியின் முதல் இரண்டு ஆண்டுகளுக்கு, பத்து தகுதிபெறும் ஆவணங்களை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்துக்கொள்ளலாம்.

இலவச மொழிபெயர்ப்புச் சேவைகள் பற்றிய கூடுதல் விவரங்களை உள்துறை அமைச்சக இணையதளத்தில் பார்க்கலாம் (https://translating.homeaffairs.gov.au/en).

மொழிபெயர்ப்பாளர்கள் மற்றும் உரைபெயர்ப்பாளர்களுக்கான தேசிய அங்கீகார ஆணையத்தைத் (NAATI) (https://www.naati.com.au/) தொடர்புகொண்டு மற்ற மொழிபெயர்ப்பு விருப்பங்கள் பற்றிய தகவல்களைக் கண்டறியலாம்.

## **தொலைபேசி உரைபெயர்ப்பாளரை அணுக உதவுக்கூடிய உதவி ஆவணங்களைத் தருவீர்களா**?

ஆம். ஆங்கிலம் அல்லாத மொழி பேசுபவர்கள் உரைபெயர்ப்பாளரை அணுக உதவும் வகையில் TIS நேஷனல் மொழிபெயர்க்கப்பட்ட பலதரப்பட்ட உதவி ஆவணங்களை வழங்குகிறது. ஆங்கிலம் அல்லாத மொழி பேசுபவர்களுக்கான உதவி ஆவணங்களை விளம்பரப் பொருட்கள் பட்டியலில் (https://www.tisnational.gov.au/About-TIS-National/Materials-to-help-you-access-an-interpreter) பார்க்கவும்.

## TIS **நேஷனலிடம் உதவிகரமான வீடியோக்கள் உள்ளனவா**?

உள்ளது. வாடிக்கையாளர்கள் எங்கள் சேவைகளைப் பயன்படுத்துவதில் உதவும் விதமாக, TIS நேஷனல் வழிகாட்டும் வீடியோக்களை உருவாக்கியுள்ளது (https://www.tisnational.gov.au/Help-using-TIS-National-services/Videos/New-Standard-page-base.aspx).

## TIS **உரைபெயர்ப்பாளருக்கான பணி என்ன**?

பேசிய வார்த்தைகளை உங்கள் மொழியில் முடிந்தளவு துல்லியமாக மொழிபெயர்ப்பதே உரைபெயர்ப்பாளரின் பணியாகும்.

உரைபெயர்ப்பாளர்கள் அறிவுரைகள் வழங்குவதில்லை. அத்துடன் TIS நேஷனல் தொலைபேசி ஆபரேட்டர் மூலம் தேவைப்படும் அல்லது நீங்கள் தொடர்புகொள்ளும் நபருக்குத் தேவைப்படும் கேள்விகளைத் தவிர வேறு கேள்விகள் எதையும் கேட்கமாட்டார்.

TIS நேஷனல் உரைபெயர்ப்பாளர் கண்டிப்பான நெறிமுறைகளுக்குக் கட்டுப்பட்டுள்ளனர். நெறிமுறைகள் அவர்களின் தொழில்முறை நடத்தை நிர்வகிப்பதுடன், பின்வருவதில் அடங்கும் பல்வேறு கடமைகளை உள்ளடக்கியது:

- தொழில்முறை நடத்தை
- இரகசியத்தன்மை
- திறன்
- பாகுபாடு பார்க்காமல் இருப்பது
- துல்லியத்தன்மை
- பணி வரம்புகள் பற்றிய தெளிவு
- தொழில்முறை உறவுகளைக் கடைப்பிடித்தல்
- தொழில்முறை வளர்ச்சி
- தொழில்முறை ஒற்றுமை.

நெறிமுறைகள் பற்றிய கூடுதல் விவரங்கள் பற்றிய கூடுதல் தகவல்களை உரைபெயர்ப்பாளர்கள் மற்றும் மொழிபெயர்ப்பாளர்கள் (AUSIT) இணையதளத்தில் (https://ausit.org/code-of-ethics/) பார்க்கலாம்.

## உரைபெயர்ப்பாளரைச் சிறந்த முறையில் பயன்படுத்துவது எப்படி?

நீங்கள் உரைபெயர்ப்பாளரை பின்வரும் வழிகள் மூலம் மேலும் பலன் பெறும் வகையில் பயன்படுத்தலாம்.

- TIS நேஷனலை அழைக்கும் முன் உங்களுக்குத் தேவையான எல்லாத் தகவல்களையும் வைத்துக்கொள்ளுதல்
- மீண்டும் பேசத் தொடங்குவதற்கு முன், உரைபெயர்ப்பாளர் பேசி முடிக்கும் வரை பொறுமையுடன் காத்திருத்தல்
- சிறிய வாக்கியங்களைப் பயன்படுத்துதல்
- மொழிபெயர்க்க கடினமான வட்டார வழக்கு அல்லது புரியாத வார்த்தைகளைத் தவிர்த்தல்
- உரைபெயர்ப்பாளரின் பணியைப் புரிந்துகொள்ளுதல்
- உரைபெயர்ப்பாளரிடம் அறிவுரை அல்லது உங்கள் சார்பில் பேசும்படி கேட்காமல் இருத்தல்
- உரைபெயர்ப்பாளரைப் புரிந்துகொள்வது கடினமாக இருந்தால், உரைபெயர்ப்பாளர், அமைப்பு அல்லது TIS நேஷனலிடம் உடனடியாகத் தெரிவித்தல்

## TIS நேஷனலுக்கு என் கருத்தை எப்படி தெரிவிப்பது?

TISநேஷனல் நிறுவனம் ,உள்துறை விவகாரங்கள் அமைச்சகத்தில் மொழிச்சேவை வழங்கும் நிறுவனமாகும்The Global Feedback Unit (GFU) (https://www.homeaffairs.gov.au/help-and- . support/departmental-forms/online-forms/complaints-compliments-and-suggestions)தான் TIS ,நேஷனல் வழங்குகிற சேவைகள் உள்ளிட்ட ,அனைத்துத் துறைப் பின்னூட்டக் கருத்துக்களையும் பெற்றுக்கொள்வதற்கான மையமாகும் .

TISநேஷனலில் ,எங்களது வாடிக்கையாளர்களிடமிருந்து வரும் பின்னூட்டக் கருத்துக்கள் எங்களது பணியை மேம்படுத்திக் கொள்ள எங்களுக்கு உதவி ,அரசாங்கத்திற்கும் ,தொழில் நிறுவனங்களுக்கும் ,சமுதாயங்களுக்கும் ,நம்பகமாக்கிய ,கையடக்க விலையில் , பாதுகாப்பான மொழிச் சேவைகள் வாயிலாக ,நாங்கள் கொடுக்கும் மொழிமாற்றச் சேவைகளின் தரத்தை அதிகரிப்பதால் ,அவற்றை நாங்கள் பெரிதும் மதிக்கிறோம் .

ஆங்கில மொழித் திறமைகள் குறைவாகவுள்ள அல்லது சுத்தமாக இல்லாத TIS நேஷனல் வாடிக்கையாளர்கள் ,இணையம் வாயிலாக அல்லது தொலைபேசி வாயிலாக TIS நேஷனல் குறித்த பின்னூட்டக் கருத்துக்களைச் சமர்ப்பிக்கலாம் .இணைய வாயிலாகப் பின்னூட்டக் கருத்துக்களைத் தர ,தயவுசெய்து இத்துறையின் பாராட்டுக்கள் ,புகார்கள் மற்றும் ஆலோசனைகள் பிரிவை அணுகுங்கள்https://www.homeaffairs.gov.au/help-and-support/departmental-) .(forms/online-forms/complaints-compliments-and-suggestionsஉங்களுக்கு மொழிபெயர்ப்பாளர் ஒருவர்

தேவையாக இருந்தால் ,தயவுசெய்து TIS நேஷனல் நிறுவனத்தை 450 131 எண்ணில் அழைத்து , தொழிபேசி உதவியாளரிடம் TIS நேஷனல் குறித்து பின்னூட்டக் கருத்து கொடுக்க வேண்டுமென்று சொல்லுங்கள் .எங்களது தொலைபேசி உதவியாளர்கள் உங்களது பின்னூட்டக் கருத்தை ஆவணப்படுத்தி ,நடவடிக்கை எடுப்பதற்காக அதை TIS ,நேஷனலில் இருக்கும் உரிய குழுவினரிடம் அதை அனுப்பி வைப்பார்கள்.

### குடும்ப வன்முறைத் தொடர்பான விஷயங்களைப் பேசுவதற்காக உரைபெயர்ப்பாளரைப் பயன்படுத்த விரும்புகிறேன். எனக்கு உதவக்கூடிய உதவி ஆவணங்கள் உள்ளனவா?

வீட்டு வன்முறையும் குடும்ப வன்முறையும், பாலியல் தாக்குதல் மற்றும் கட்டாய திருமணம், மற்றும் பாதுகாப்புக்கான ஒரு பெண்ணின் உரிமைத் தொடர்பாக ஆஸ்திரேலிய சட்டங்கள் பற்றிய தகவல்கள் கொண்ட குடும்பப் பாதுகாப்புத் தொகுப்பை ஆஸ்திரேலிய அரசாங்கம் உருவாக்கியுள்ளது. இந்தத் தொகுப்பில், 46 மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்ட நான்கு விவரத் தாள்கள் மற்றும் ஒரு ஸ்டோரிபோர்டு உள்ளடக்கியுள்ளது. சமூகச் சேவைத் துறையின் இணையதளத்தில் குடும்பப் பாதுகாப்புத் தொகுப்பைப் (https://www.dss.gov.au/family-safety-pack) பார்க்கலாம்.

குடும்பப் பாதுகாப்புத் தொகுப்பை முழுமையாக்கும் விதமாக, வீட்டு வன்முறைச் சூழல்களில் உரைபெயர்ப்பு செய்தல் (https://www.dss.gov.au/women-programs-services-reducing-violence-family-safety-pack/interpreting-in-domestic-violence-situations) மற்றும் உரைபெயர்ப்பாளர்களும் குடும்பப் பாதுகாப்பும் (https://www.dss.gov.au/settlement-and-multicultural-affairs/publications/interpreters-and-family-safety) என்ற விவரத்தாள்கள், குடும்ப வன்முறை சூழல்களில் உரைபெயர்ப்பாளர்களின் பங்கு மற்றும் பொறுப்பு பற்றிய விழிப்புணர்வை அதிகரிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளன.

## எனக்கு இலவசமாக ஆங்கிலம் கற்றுக்கொள்ளத் தகுதி இருக்கிறதா?

)தி அடல்ட் மைக்ரண்ட் இங்ளீஷ் புரோக்ராம் The Adult Migrant English Program (AMEP( (என்ற திட்டம் , அவுஸ்திரேலிய சமுதாயத்தில் குடியமர்ந்து ,அதில் பங்கேற்றுக் கொள்ள உதவுவதற்காகத் , தகுதியடைகிற குடிவரவாளர்களுக்கு இலவச ஆங்கில மொழித் தனிப்பயிற்சியைத் தருகிறது . (https://immi.homeaffairs.gov.au/settling-in-australia/amep/about-the-program)

AMEPதிட்டம் ,குடும்ப ,திறன்வாய்ந்தோர் மற்றும் மனிதாபிமான வீசா வகைகளில் இருந்து வரும் 18 வயதிற்கு மேற்பட்ட குடிவரவாளர்களுக்குக் கிடைக்கிறது ,இதில் நிரந்தர வீசாக்களை வைத்திருப்போரும் ,சிலவகை தற்காலிக வீசாக்களை வைத்திருப்போரும் அடங்குவர் . தகுதியடைகிற வீசாக்களில் இருக்கிற அவர்களைச் சார்ந்திருப்போர் இதில் கற்றுக்கொள்ள இயலும் ,அதோடு 17 – 15 வயதுடைய குடிவரவாளர்களும் ,சில சூழ்நிலைகளில் பங்கேற்றுக் கொள்ளலாம் .பள்ளி செல்லும் வயதைவிடக் குறைவான வயதுடைய குழந்தைகளை வைத்திருப்போருக்குக் ,நேரில் நடைபெறும் வகுப்புகளுக்கு வருகையில் ,இலவசக் குழந்தைப் பராமரிப்பு வசதி கிடைக்கிறது.

நீங்கள் ஆங்கிலம் கற்றுக்கொள்ள உதவுவதற்காக AMEP ,திட்டத்தில் பல்வேறு விதமான , வசதிக்கேற்ப கற்றுக்கொள்ளும் வழிவகைகள் உள்ளன ,அதில் நேரில் கற்றுக்கொள்ளும் )கோவிட்-பாதுகாப்பான (வகுப்புகள் ,இணைய வகுப்புகள் ,தன்னார்வத் தொண்டர் தனிப்பயிற்சித் திட்டம் மற்றும் தொலைதூரக் கல்வித் திட்டம் ஆகியவை அடங்குகின்றன . நீங்கள் வசிக்கும் இடத்தைப் பொருத்து ,முழு நேர ,பகுதி நேர ,மாலைநேர மற்றும் வார இறுதி வகுப்புகளும் கிடைக்கலாம்.

இலவசமாக எவ்விதம் ஆங்கில கற்க ஆரம்பிப்பது என்பதைத் தெரிந்து கொள்ள ,உங்களுக்கு அருகாமையில் இருக்கிற AMEP திட்டம் வழங்கும் நிறுவனத்தைத் தொடர்பு கொள்ளுங்கள்

(https://immi.homeaffairs.gov.au/settling-in-australia/amep/service-providers)அல்லது இந்த www.homeaffairs.gov.au/amepஇணையதளம் சென்று பாருங்கள்